வெளியீடு — 1

உ

முருகன் துணை



யா / கோண்டாவில் கிழக்கு

# ஸ்ரீ ஞானப்பழனியாண்டவர் தோத்திரமாலை

ஆக்கியோன்: அருட்கவி. சீ. விநாசித்தம்பி

4 - 6 - 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்








யா / கோண்டாவில் கிழக்கு

# ஸ்ரீ ஞானப்பழனியாண்டவர்
# தோத்திரமாலை



வெளியீடு :

ஆலய பரிபாலன சபை

1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வக் கணபதியும் செஞ்சூல வைரவரும்
நல்விளக்காய் நின்று நடம்புரிய — செல்வமிகு
கோண்டாவில் மேவும் குருவே திருப்பழனி
ஆண்டவனே இன்பம் அருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருத்தல வரலாறு

வேலுண்டு வினையில்லை,

மயிலுண்டு பயமில்லை.

கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. கோண்டாவிற் சந்தியின் மேற்பால் ஆங்காங்கே அம்பாள் ஆலயங்கள், விநாயகர் ஆலயங்கள், பண்டு தொட்டுப் பெரிய கோயில்களாக அமைந்திருந்த போதிலும், கீழைக் கரையிலே அப்படியான கண்ணைக் கவரும், கருத்தைக் கௌவும் வகையிலே ஆலயங்கள் ஏதும் இல்லாதிருந்தது. இற்றைக்கு 43 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிலே முருகப்பெருமான் நீக்கமறக் குடிகொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளில், அற்புதம் நிறைந்த பழனித் திருத்தலத்திலிருந்து அப்பரம் பொருளின் திருவருள் பாலித்ததாலோ என்னவோ பழனிமலைக் கல்லொன்றும், அம் மலையிலேயே கிடைத்த வெண்சங்கொன்றும், செவ்வேள் திருக்கைவேல் ஒன்றும் கொண்டு வந்தார் ஓரன்பர். இப்படிப் பழனிவேல் கொண்டுவந்து பிரதிட்டை செய்யவல்ல அன்பர் என்பதினாலோ என்னவோ அவருடைய பெற்றோர் வேலப்பு என்ற நாமத்தைச் சூட்டி இருந்தனர். வேலப்பு கொண்டுவந்த வேல், கடந்த 1—5-1939—ம் தேதி வந்த வைகாசி மாதத்து விசாக நன்னாளிலே அன்னவராலே பிரதிட்டை செய்யப்பட்டு பக்தி பரவசத்துடன் பூசனை செய்யப்பட்டது. இடைக்காலத்திலே வேலோடு கூட அமைக்கப்பட்ட வைரவ சூலத்தை பிரீதிபண்ண நினைத்த அன்பர்கள் இந்த ஞானப்பழனி ஆண்டவன் சன்னிதானத்திலே வருடா வருடம் ஆடி மாதத்திலே பொங்கல் பொங்கி, ஆடு, கோழிகளும் பலியிட்டு வணங்கினர். பழனியிலிருந்து எழுந்தருளிவந்த அந்த ஞானப்பழம், பலியை ஏற்கச் சித்தமில்லாதிருந்த காரணத்தாலோ என்னவோ 1945—ம் ஆண்டே பலி கொடுத்துச் செய்த வேள்வியை நிறுத்தத் திருவுளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். வேள்வி நின்றது. ஆனால், வேள்வி நடைபெற்றுப் புனிதத் தன்மையை இழந்த இடம் தமக்குப் பொருத்தமானது அல்ல எனக் கொண்ட ஞானப் பழனிப் பழம், தாம் இருந்த இடத்திலே இருந்து சிறிது விலகி இருக்கத் திருவுளங்கொண்டார் போலும். கோண்டாவில் இருபாலை வீதியில் ஒரு மருங்கைத் தம்மிடமாக்கிக் கொண்ட பெருங் கருணையை என்னென்பது. *கடந்த 1976—ம் ஆண்டு வைகாசி மாதத்துச் சுவாதி நட்சத்திர தினத்திலே அழகு கொழிக்கும் இச் சிறிய கோவிலிலே பிரதிட்டை செய்யப்பட்டு, அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிலேயே விநாயகர், வைரவர் ஆதிய பரிவார தெய்வங்கள் தம்மைப் புடைசூழ மனமுருகி வழிபாடாற்றும் அன்பர்க்கெல்லாம் அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

வைகாசி விசாகத் தினத்திலே கருணைகூர் முகங்களாறுங், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே அருளை வாரி வழங்கும் வள்ளல் விசாகனுக்குப் பெருவிழா எடுக்கும் நோக்கோடு, அத்தினத்துக்கு முதற் பத்துத் தினங்களும் விசேட அபிடேக ஆராதனைகள், பக்திப் பஜனைகள், அவன் புகழை வாரி வழங்கும் சொற்பொழிவுகள் நடைபெற்று விசாகத்தன்று சங்காபிஷேகம் செய்து அன்பர் கூட்டம் ஸ்ரீ ஞானப் பழனிப் பரம்பொருளைக் குளிர வைக்கும் நல் வரலாற்றைக் கூறுமலிருக்கமுடியாது. இன்று அப் பரம்பொருள் கோயில் கொண்டிருக்கும் திருப்பதியிலே அவனடி பணியும் அன்பர் பலர் அக் கோயிலைச் சூழ மாடமாளிகைகள் அமைத்து, வளமாக வாழுகின்றமை அப்பன் பொழியும் அருட்கருணையின் பெருமையே என்று கூறுவது மிகையாகாது,

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

— கச்சியப்ப சிவாச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா

## காப்பு

கற்பகச் சிலை தந்த கணேசனை
வெற்பு மேருவில் வேத மெழுதிய
தற்பர னைத்துயர் தணிக்கும் பராபர
அற்புதக் களிற் றனை வணங்குவாம்.

## நூல்

சீராரும் வேலேந்தும் சிங்காரக் கந்தனே
சிவசக்தி தந்த குகனே
தாராரும் புனவள்ளி தந்திமகன் நாதனே
சரவணபவானந்தனே
பேராரும் நின்பாதம் பரவிடும் தொண்டுபுரி
பேற்றினைத் தந்தருள்வாய்
பாராரும் கோண்டாவிற் பதிமேய சிவஞானப்
பழனியாண்டவ மூர்த்தியே.

ஓங்காரப் பொருள்வினவி நான்முகனைச் சிறையிட்ட
ஒப்பிலாக் குருநாதனே.
தீங்கேறு மசுரரைப் பொடிசெய்து தேவரின்
சிறைமீட்ட வடிவேலனே,
நீங்காத வெமதுமிடி பிணியகல நின்கருணை
நீண்மலர்த் தாளருள்வாய்
பாங்கான கோண்டாவிற் பதிமேய சிவஞானப்
பழனியாண்டவமூர்த்தியே.

ஐந்தலை நாகமிசை யாடுமரி மருகனே
ஆடுமயில் சேவலுடனே
நைந்துருகு மடியாரின் நெஞ்சிலே யுறைகின்ற
நாதாந்த யோகமுதலே
மைந்தரெமைப் பெற்றவொரு தந்தையே நின்பாதம்
மறவாத வரமுதவுவாய்
பைந்தமிழ்க் கோண்டாவிற் பதிமேய சிவஞானப்
பழனியாண்டவமூர்த்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்புனற் காவிரியைத் தந்தகண பதிவேளைத்
தருணத் தழைத்துவள்ளிப்
பெண்கிளியை மணம்பூண்ட சண்முகத் தெய்வமே
பெருநாவல் மரத்தினின்று
வண்கவித் தேன்கேட்ட வள்ளலே நினைக்காணும்
மந்திரவிளக்கருளுவாய்
பண்புமிகு கோண்டாவிற் பதிமேய சிவஞானப்
பழனியாண்டவமூர்த்தியே

துயரதிக நக்கீரன் முருகாற்றுப் படைகேட்டுச்
சூழ்ச்சிதரு கற்கிமுகியைப்
புயமருவு தண்டாயு தத்தினால் மாய்த்தருட்
போதகம் வழங்கு முருகா!
மயலதிக வடியாரை வாழ்விக்கும் வரதனே
மனங்குவியும் நிலையை யருள்வாய்
பயனதிக கோண்டாவிற் பதிமேய சிவஞானப்
பழனியாண் டவமூர்த்தியே.

கழனிசெறி மதுரைநகர் அரசாண்ட கந்தனே,
கனிவாங்க மயிலிலேறி
அழகுசெறி யண்டங்கள் வலம்வந்த சீலனே
அருணகிரிக் கருள்வேலனே,
மழவிடையில் வருமீசற் கினியகுரு நாதனே
வந்தெமது சிந்தையுறைவாய்
பழனமிகு கோண்டாவிற் பதிமேவு சிவஞானப்
பழனியாண் டவமூர்த்தியே

தென்பழனி மலைசென்ற வேலப்பர் எனுமடியர்
திருமுருகன்தரக் கொணர்ந்த
வான்புகழும் வேல்சங்கு மருவுவெண்கல் சூலம்
வைத்திங்கு வணக்கமாற்ற
மான்வள்ளி குஞ்சரியொ டானந்த முய்நின்ற
வரதனேயெம்மைக்காப்பாய்
பான்மலியும் கோண்டாவிற் பதிமேவு சிவஞானப்
பழனியாண்டவமூர்த்தியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைதரு தந்தைநீ பெறுமினிய அன்னைநீ
பிறந்துவரு சோதரரும்நீ
வருமுறவு நீகற்ற வண்ணநற் கலைகணீ
மாசிலாப் பொன்பொருண்நீ
மருவுசுக வாழ்வுநீ யென்றுனது மறைபேசும்
மலரடியை நம்பி நின்றேன்
பருதியெனக் கோண்டாவிற் பதிமேவு சிவஞானப்
பழனியாண்டவ மூர்த்தியே

சித்திதரும் பழம்யோக வித்துதவும் பழமன்பு
திரண்டுவரும் செல்வப்பழம்
முத்திதரும் தருமப்பழம் மூலமாய் மூலத்தின்
முளையாகித் தருவாகிமெய்ச்
சத்திதரும் ஓங்கார மாம்பழம் நீயாகி
தமியேமைக்காக்குமரசே
பத்திதரும் கோண்டாவிற் பதிமேவு சிவஞானப்
பழனியாண்டவமூர்த்தியே

இமயநிகர் நிதியுண்டு மனநிறையும் மக்களுடன்
இன்பமுயர் மனைவியுண்டு
சமயமுணர் நிலையுண்டு தவமுண்டு தத்துவம்
நலைநின்ற பேறுமுண்டு
நமனுலகை நீக்குமொரு கதியுண்டு நின்கருணை
நற்பதம் நினைந்தவர்க்கே,
பமரவொலிக் கோண்டாவிற் பதிமேவு சிவஞானப்
பழனியாண் டவமூர்த்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் திருப்புகழ்

கரவெழு தீங்கா யிரமிகு பிறவித் துயராலே
கருதிடு மாங்கா ரநிலையி லுலகைப் பழியாதே
வருபிணி தாங்கா துடணிலை பதறித் திரியாதே
மனமிக வேங்கா துனதடி மலரைத் தருவாயே
குரவுறு பூந்தார் அணிபுய வழகுக் கதிர்வேலா
குறமுறு பூங்கா வனமக ளிணையப் பெறுவோனே
பரமனை நீங்கா வுமைமுலை பருகிப் பொலிவோனே
பரவிடு கோண்டா நகருறை பழனிப் பெருமாளே.



குன்று தோறும் குமரா நின்றுன் சரணம்
குருவாய் வருவாய் அருள்வாய் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

பழம் பெருமை வாய்ந்த எங்கள் அருள்மிகு மூர்த்தி, ஸ்ரீ ஞானப் பழனியாண்டவப் பெருமானைப் பத்திப் பர வசத்துடன் பாடிப் பரவிப் பக்தர்கள் வழிபாடாற்ற வாய்ப்பாக, இந்தத் தோத்திரமாலையை ஆக்கி அளித்து தவிய அருட்கவி. சீ. விநாசித்தம்பி அவர்கட்கும், மிகக் குறுகிய காலத்திலே இதனைப் புத்தக வடிவிலே அமைத்து தவிய திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் எமது உளங் கனிந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org